மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

மார்ச் 2010

# சூழ்நிலையின் துரித மதிப்பிடல்

**(Rapid Context Assessment )**


**தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு**

| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | 2 |
| ஆட்சிமுறைமை | 2 |
| மனித உரிமைகள் | 2 |
| மனித பாதுகாப்பு | 3 |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | 4 |
| பொருளாதார சூழ்நிலை | 4 |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | 5 |
| சுற்றுச் சூழல் | 5 |

**மாவட்ட பகுப்பாய்வுகள்**

| | |
|---|---|
| அம்பாறை | 6 |
| மட்டக்களப்பு | 6 |
| கொழும்பு | 6 |
| யாழ்ப்பாணம் | 6 |
| மன்னார் | 7 |
| வவுனியா | 7 |
| திருகோணமலை | 7 |


**தற்காலப் போக்குகளின்**

| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | ➡ |
| ஆட்சிமுறைமை | ⬇ |
| மனித உரிமைகள் | ➡ |
| மனித பாதுகாப்பு | ➡ |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | ↘ |
| பொருளாதார சூழ்நிலை | ➡ |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | ⬇ |
| சுற்றுச் சூழல் | ➡ |

**சுட்டிகளின் அடையாளம்**

## முக்கிய சாராம்சம்



*மூலம்: ஆசியா ட்ரிபியூன் (Asiatribune)*

ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல், மார்ச் மாதத்தில் நாட்டின் அனைத்து நடவடிக்கைகளிலும் ஆதிக்கம் செலுத்தியிருந்தது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்று அடுத்த அரசாங்கத்தை அமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வெற்றி பெறும் இடைவெளி தொடர்பிலேயே கேள்விக்குறி காணப்படுகின்றது. அரச வளங்களை தேர்தல் பிரசா ரங்களுக்காக அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்து வருகின்றது. எதிர்க்கட்சியும் வலுவி ழந்ததாக இருக்கின்றது. தேர்தல் பிரசாரத்தில் பிரதான இடம் பிடித்திருப்பது, கட்சிக்குள்ளே நிலவும் போட்டியாகும். விசேடமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள்தான் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது. வடக்கு கிழக்கில் வாக்காளர்களுக்கு தமது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக கூறி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவும் உரிய பல-னைத் தரவில்லை. அதேவேளை, தேர்தலுக்காக அரசாங்கம், அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதாக கூறியும் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. நல்லாட்சி முறைமை மற்றும் மனித உர-மைகளின் உறுப்புரைகளை அரசாங்கம் பின்பற்றத் தவறியுள்ளமையும், சர்வதேச சமூ கத்தின் மத்தியில் பெரும் இக்கட்டான நிலையை உருவாக்கியுள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் சர்வதேச கண்காணிப்பு குழுவொன்றை அமைப்பது தொடர்பில் ஐ.நா செயலாளர் நாயகம் சமர்ப்பித்த யோசனைகளையும் அரசாங்கம் மறுத்து வருகின்றது. யுத்தம் நிறைவடைந்துள்ளமை பொதுவில் மனித பாதுகாப்பு குறித்த சிக்கல்களை குறைத்துள்ளது. எனினும், சமூகத்தின் ஒருகுறிப்பிட்ட குழுவினர் தொடர்ந்தும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். தேர்தலை தொடர்ந்து மேலே குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் அதிக கவனஞ் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொலிஸார் தொடர்ந்து தண்டனை பயமற்ற நிலையில் செயற்பட்டு வருகின்றனர். பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளமையும் நாட்டின் மனித பாதுகாப்பு நிலைமை அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது. இவ்வாறான மனித உரிமை மீறல்கள் நாட்டின் நீதி நடைமுறை தொடர்பிலான உதாரணத்தை வெளிப்படுத்துகின்றது.

மார்ச் 22ஆம் திகதி பேருந்தில் வந்திறங்கிய குழுவினர் நாட்டின் முன்னணி ஊடக நிறுவனமான எம்.ரி.வி நிறுவனத்தின் தலைமை யகத்தின் மீது தாக்குதல் நடத்தினர். சிவில் சமூகங்களின் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கத்தின் மீதான அவதூறுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சுதந்திரம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு என்பன அரசாங்கத்தினால் எட்டக்கூடியது என்பதனை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டிய முக்கிய பொறுப்பு சிவில் சமூக த்திற்கும்,ஊடகத்திற்கும் உள்ளது. ஆரசியல் சூழ்நிலையில் மாத்திரமல்லாது, சமூகத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளுக்குமான பிரஜைகளின் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சிவில் சமூகத்திடம் உள்ளது. ஊடகங்கள் தமது நடுநிலைமை த்தன்மையை மீள உறுதிசெய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. பொருளாதார நிலைமைகள் தொடர்பில் மார்ச் மாதத்தில் புதிதாக மாற்றம் எதுவும் இல்லை. மாதத்துக்கான பொருளாதார மாற்றம் குறித்த முன்னேற்பாடுகள் தேர்தல் காரணமாக ஒத்தி வைக்க ப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நிதி தேவைகளை நிறைவு செய்வதற்கான நிதியுதவிகள் தொடர்பான நடவடிக்கைகளே அவசியமாக செய்ய வேண்டியதாக உள்ளது. 2009ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் முழுமையாக வரவுக்கு மீறிய செலவாக மாறிவிட்டது. 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட துண்டு விழும் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10.2% ஆக உள்ளதாக திறைசேரி அறிவித்துள்ளது. இந்த பெறுமதி 7.0% ஆக உத்தேசிக்கப்பட்டிருந்தது.

நிதியுதவியை நாடியுள்ள அரசாங்கத்திற்காக இலங்கை அபிவிருத்தி பிணைகள் 100 மில்லியன் ரூபாய் பெறுமதியான முறிகளை மார்ச் மாத ஆரம்பித்தில் வெளியிட்டிருந்தன. இந்த நிலையில் அடுத்த வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதுஅரசாங்கத்திற்கு இலகுவா ன விடயம் அல்ல. இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களில் ஏற்பட்டுள்ள நிதிபுரள்வுகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை நிபந்தனைகளாக நிதி உதவி வழங்குபவர்கள் தெரிவித்து வருகின்றனர். மறுபுறத்தில், தேர்தலில் வெற்றி பெறும் நோக்குடன் அரசாங்கம் பல்வேறு நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி வருகின்றது. நிதி சம்பந்தமான வீழ்ச்சியை கட்டுப்படுத்துவது என்பதே அடுத்து வரப்போகின்ற நிதியமைச்சரின் முன் உள்ள பிரதான சவாலாக இருக்கப் போகின்றது. சில சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியே அடுத்த நிதிய மைச்சராகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஜனவரி மாதம் முதல் மழையற்ற காலநிலை காரணமாக வரண்டு போயிருந்த பல பகுதிகளில் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும், பல பகுதிகளில் தொடர்ந்து வரண்ட காலநிலை நிடிக்கின்றது. மலைப் பிரதேசங்களில் அதிக வெப்பநிலை காரணமாக காட்டுத்தீ ஏற்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. நாடு முழுவதும் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அது குறித்த அவதானங்களை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. வில்பத்து தேசிய சரணாயலம் ஊடான சர்ச்சைக்குரிய பழைய மன்னார் வீதியின் மீள்பாவனை மற்றும் புனரமைப்பு பணிகள் ஊடகத்தில் பிரதான கவனத்தைப் பிடித்துள்ளன. சரணாலயத்தை பாதுகாப்பதற்கு இந்த பாதை மூடப்படவேண்டும் என பல்வேறு சுற்றாடல் ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாற்றம் இல்லை | ➡ | சிறிது மேம்பட்டுள்ளது | ↗ | சிறிது சீர்கெட்டுள்ளது | ↘ |
| கணிசமானளவு மேம்பட்டுள்ளது | ⬆ | கணிசமானளவு சீர்கெட்டுள்ளது | ⬇ | | |

# தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு - 25/2/2010 - 26/3/2010

## அரசியல் சூழ்நிலை

ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி ஏழாவது பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. தேர்தல் பிரசாரங்கள் எல்லாம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், தேர்தல் சட்டங்களுக்கு அமைய, தேர்தல் நடைபெறுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் அனைத்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் நிறுத்தப்படல் வேண்டும். தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடரும் நிலையில், தேர்தல் வேட்பாளர்களும் தாக்கப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வேட்பாளர்களுக்கு இடையில் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டிமுறையை கொண்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறையை சிலர் குற்றஞ் சொல்கின்றனர். இந்த நாட்டின் பிரஜைகளுக்கு சுதந்திரமான தேர்தல் தினமொன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அல்லது வாக்காளர்களின் வாக்களிப்பு எண்ணிக்கை குறையக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான கோரிக்கை அனைத்து மட்டங்களிலும் விடுக்கப்படுகின்றது. இந்த தேர்தலின் பின்னர் நீண்ட காலத்திற்கு தேர்தல் நடைபெறுவதற்கான சந்தர்ப்பங்களும் இல்லாது போகின்றன. இரண்டாவது சர்வதேச விமானநிலையம், துறைமுகம், கைத்தொழில் பேட்டை, சர்வதேச விளையாட்டரங்கு மற்றும் கலாசார நிலையங்கள் என இலங்கையின் தென் பகுதி அபிவிருத்தி திட்டங்களில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இலங்கையின் நடவடிக்கைகளின் பிரதான நிலையமாக இந்த பகுதி மாற்றமடைந்து வருகின்றது. இதேவேளை, வடக்கு, கிழக்கும் புறக்கணிக்கப்பட்டு விடக்கூடாது. இல்லையெனின், மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கிவிடும். இதேவேளை, அரசியற் கட்சிகள் போட்டியிட்டு, தொங்கும் பாராளுமன்றமாக இன்றி தனித்த பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. இலங்கையின் மக்களின் கைகளிலேயே அந்த முடிவு தங்கியிருக்கின்றது. பொறுத்திருந்து பார்க்கலாம்.

## ஆட்சிமுறைமை

### நல்லாட்சிமுறைமையின் 'ஆசிய' மாதிரி

ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இரண்டில், மூன்று பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஜெனரல் சரத் பொன்சேகாவிலும் பார்க்க 1.8மில்லியன் வாக்குகள் அதிகம் பெற்று, 58% வாக்குகளுடன் எதிர்பாராத வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளமை எதிர்க்கட்சிகளின் மத்தியில் பலவீனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆளும் கூட்டமைப்பு கட்சியே எதிர்வரும் தேர்தலிலும் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும், அவர்கள் வெற்றி பெறப் போகின்ற வித்தியாசம் குறித்த சந்தேகம் மாத்திரமே காணப்படுகின்றது. இந்த தேர்தலில் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய விடயமாக இருப்பது, ஆளும் கூட்டமைப்பு கட்சிக்குள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் மத்தியில், அதிக விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகுவது தொடர்பில் காணப்படும் போட்டித் தன்மையே.

ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நோக்கில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பொதுத் தேர்தலில் அந்த நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது. தமது ஆதரவாளர்கள் அனைவரையும் வாக்களிக்கச் செய்ய வேண்டிய பாரிய சவாலை எதிர்க்கட்சித் தலைவர் எதிர்நோக்கியுள்ளார். எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் நம்பிக்கையற்ற தன்மை உருவாகியுள்ளது. தாங்கள் விரும்பும் கட்சிக்கு வாக்களித்தாலும், து இறுதியில் மாற்றப்பட்டு விடலாம் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. தேர்தல் சட்டங்களை மீறி, அரச வளங்களை தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதிர்க்கட்சியினருக்கு மேலும் பிரச்சினையாக உள்ளன. அரச ஊடகங்கள் மற்றும் வேறு வளங்களான வாகனங்கள், கட்டடங்கள், போன்றவற்றை ஆளுங் கட்சி வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரங்களுக்காக தவறான முறையில் துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கைகளையும் காணக் கூடியதாகவுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் காணப்பட்ட இந்த நிலை, பொதுத் தேர்தலின் போதும் நீடிக்கின்றது. இலங்கை அரசாங்கம் மீது தொடரும் குற்றச்சாட்டுக்களை அடுத்து, இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அறிவித்துள்ளார். ஆனால், எல்.ரி.ரி.ஈயினருடன் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் அனைத்துமே உள்ளக விவகாரம் என்பதில் அரசாங்கம் ஆணித்தரமாக உள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை மீது குற்றஞ்சாட்டி வரும் சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் மீது இலங்கை அரசாங்கம் விமர்சனங்களை கூறி வருகின்றது. சர்வதேச நிறுவனங்களிலும், பார்க்க உள்ளூர் நிறுவனங்களே அதிக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன."ஆசிய" மாதிரி அபிவிருத்தி என்ற இலக்கை நோக்கிச் செல்ல முயற்சிக்கும் அரசாங்கம், தேர்தலில் பாரிய வெற்றி பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளது. கொழும்பின் மிகவும் முக்கியமான பகுதியில் அமைந்துள்ள எம்.ரி.வி தொலைக்காட்சி சேவை மீதான தாக்குதல், தண்டனை பயமற்ற கலாசாரத்தின் வளர்ச்சி மற்றும் சட்ட அத்துமீறல் தொடர்பில் அரச நடவடிக்கைகள் என்பன குறித்த கேள்வியை எழுப்பியுள்ளன. ஜனநாயக அம்சங்களை பிரதிபலிக்கக் கூடிய சுதந்திர முறை ஒன்று இலங்கையில் இல்லை என்ற ஆலோசனைகள் முன்வைக்கப்படும் நிலையில், பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் இருண்டதோர் எதிர்காலத்தை மீண்டும் சந்திக்க நேரிடலாம்.

## மனித உரிமைகள்

### *தேர்தல் மனுக்கள்*

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து இந்த மாதமே, தேர்தல் காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம்பவங்களை பிரதானப்படுத்திய பல்வேறு தேர்தல் மனுக்கல் தாக்கல் செய்யப்பட்ட மாதமாக காணப்படுகின்றது. தற்போது இந்த குற்றபத்திரங்கள் நீதிமன்றத்தின் கவனத்திற்கு விடப்பட்டுள்ளன. வடக்கில் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு, அவை மறுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மனுவொன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நலன்புரி நிலையங்கள் மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேற்றப்பட்ட போதிலும், அவர்களால் தமது வாக்குரிமையை பயன்படுத்த முடியாத நிலையேற்பட்டது. அத்துடன், மற்றுமொரு மனுவில் கிளிநொச்சி வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த வாக்களிக்கும் நிலையம் மக்கள் இலகுவில் அணுக முடியாத இடமாகவிருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிலர் குறித்த வாக்களிப்பு நிலையத்தை அடைவதற்கு சுமார் 7 கிலோமீற்றர்கள் நடந்து செல்ல வேண்டியிருந்தது. அன்றைய தினத்தில் எவ்விதமான அரச, தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட குற்றங்களை சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில், குறித்த சம்பவங்களிற்கு பொறுப்பானவர்களால், மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு, அவர்களுக்கு தமது உரிமையை பயன்படுத்துவதற்கான சமமான சந்தர்ப்பம் புறக்கணிக்கப்பட்டுள்ளமையை நீதிமன்றம் பிரகடனப்படுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது. நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இவ்வாறான குறைபாடுகள் தீர்க்கப்பட்டு வாக்களிப்பதற்கு தகுதிப் பெற்றுள்ள அனைத்து மக்களும் தமது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கான சமமான சந்தர்ப்பம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### *தகவலுக்கான உரிமை*

இந்த மாதத்தில், அரசாங்கத்தினால் தமது கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளதாகவும், அதனை உடனடியாக தளர்த்த வேண்டும் எனவும், தங்களுடைய கட்சியின் தலைவர் முன்னாள் இராணுவத் தளபதி, ஜெனரல் சரத் பொன்சேக்கா விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் ஜனநாயக தேசிய முன்னணி கோரிக்கை முன்வைத்துள்ளது. எனினும், இணையத்தளம் தடை தொடர்பிலான விடயத்தை தொலைத்தொடர்பு ஆணைக்குழு முற்றாக மறுத்துள்ளது. இணையத்தளமொன்றை தடைசெய்வது என்பது பிரஜைகளின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களின் உண்மையிருப்பின்,

உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

### அ.சா.நிகள் தொடர்பிலான சிக்கல்கள்

இலங்கையின் மக்களுக்கு காலத்துக்கு காலம் அவசர சந்தர்ப்பங்களிலும், சாதாரண சந்தர்ப்பங்களிலும் உதவி புரிவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மிகவும் முக்கியமான பங்கினை வகித்து வந்துள்ளன என்பதனை மறுக்க முடியாது.

அத்துடன், சில நிறுவனங்களின் தவறான நடவடிக்கைகள் காரணமாக அனைத்து நிறுவனங்களுக்கும் அவப்பெயர் ஏற்பட்டுள்ளமையையும் மறுக்க முடியாது. இதன் காரணமாக அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதும் தடைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



Source: news.bbc.co.uk

இளம்பெண் ஒருவரை பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்திய குற்றச்சாட்டுக்காக கல்கிஸ்ஸ பொலிஸ் நிலைய குற்றவியல் தடுப்பு பிரிவின் நான்கு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். பொலிஸ் மாஅதிபரால் இவர்கள்

சேவையில-
ிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தேடலின் போது நபர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் திருகோணமலை பொலிஸ் நிலைய தலைமையக பரிசோதகரும்,

மேலும் மூன்று பொலிஸாரும் சேவ-
வயில்
இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான பொலிஸ் மாஅதிபரின் ஒழுக்காற்று நடவடிக்கைகளினால் பொலிஸார் மீதான மக்களின் பார்வை மாறிவருகின்றது.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் பல, மக்களுக்கான மனிதநேய உதவிகளை வழங்கி வரும் மிகவும் முக்கியமான நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### பொலிஸாரின் ஒழுங்கு நடவடிக்கைகள்

தவறாக நடந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான பொலிஸ் மாஅதிபர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்த சம்பவம் இம்மாதம் பதிவாகியுள்ளது. கடற்கரையில்

எவ்வாறாயினும், இந்தமாதத்தில் பாதுகாப்பு செயலாளரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ்மாஅதிபரால் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்கள் 8 பேரும், இரண்டு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும் சேவையில் இருந்து இடைவிலக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாகத்தில் அரசியல் தலையீடுக்கு, இந்த நடவடிக்கை சிறந்த உதாரணமாக இருக்கின்றது




Source: Asiatribune

## மனித பாதுகாப்பு

கடந்த வருடம் இடம்பெற்ற, பொலிஸ் காவலில் இருந்த போது இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டு, அப்பகுதியில் வசித்தவர்கள் குறித்த பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்திய சம்பவத்தை தொடர்ந்து கைது செய்யப்பட்ட அங்குலான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் அந்த நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்கத் தவறியமைக்காக இளைஞர் ஒருவர் காவலில் இருந்த சந்தர்ப்பத்தில் தாக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியுள்ளது. இதனையடுத்து குறித்த இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த 25பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரினால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட அறிக்கைக்கு அமைய நாட்டில் பாலியல் துஷ்பிரயோகங்கள் சார்ந்த சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்த அறிக்கையின் பிரகாரம், எல்லா தினங்களிலும் குறைந்தது பாலியல் துஷ்பிரயோகம் அல்லது பாலியல் வன்புணர்ச்சி குறித்த சம்பவம் பதிவாகியுள்ளது. ‘தந்தையால் மகள் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுதல்,

ஆசிரியரினால் மாணவி வன்புணர்ச்சக்கு உள்ளாக்கப்படுதல், அல்லது அதிபரால் பாடசாலை சிறுமி வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுதல்’ போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மார்ச் மாதம் 4ஆம் திகதி 4 வயதான அமிலா சந்தருவன் பெர்னான்டோ என்ற சிறுமி, தன்னுடைய தாயினால் களுகங்கையில் வீசப்பட்ட சம்பவமே இம்மாதத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த சம்பவமாக மாறியிருந்தது. இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்த தாய் கைது செய்யப்பட்டுள்ளார். அமைப்பு ரீதியாக அது சரியான விடயம். ஆனால், எவராவது அந்த தாயிடம், “ஏன்”, “தற்போது என்ன செய்யப் போகின்றீர்கள்” என்ற கேள்விகளை எழுப்பியிருப்பார்களா? இதனை ஆராயாது, அவருக்கு தண்டனை வழங்குவது “ஏன்?”........

## சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம்

மார்ச் மாதத்திற்கான சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் என்ற பகுதியினை மார்ச் மாதம் 23ஆம் திகதியிலிருந்து நான் ஆரம்பிக்கின்றேன். வருகை அல்லது வெளியேற்றம் என்பவற்றிற்கான விசேடமான தினமாக அது இருக்கின்றது. மார்ச் 22ஆம் திகதி இலங்கையின் பிரபலமான தனியார் தொலைக்காட்சி நிலையமான எம்.ரி.வி தலைமையகத்திற்கு மதிய நேரத்தில் பேருந்தில் சென்று இறங்கிய குண்டர்கள் குழுவொன்று தாக்குதல் நடத்தியது. நாட்டில் உள்ள அனைத்து தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்களுடனும் ஒப்பிடும் போது, எம்.ரி.வி வலையமைப்பை, அரசியல் செய்திகளை வெளியிடுவதில் நடுநிலைமையான வலையமைப்பாக என்னால் கூறமுடியும். மார்ச் மாதம் 22ஆம் திகதி எம்.ரி.வி தலைமையகம் மீது இடம்பெற்ற இந்த சம்பவமானது குண்டர்களின் செயல்களுக்கான ஆரம்பமாக இல்லாது, அதுவே இறுதியான நடவடிக்கையாக இருக்க வேண்டும் என நம்புவோமாக.



Source:ABoutsrilanka.com

பல்கலைக்கழகங்களின் அனைத்து துணை முதல்வர்களும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் ஆளுங்கட்சி மீதான தமது அரசியற் குற்றச்சாட்டுக்களை பகிரங்கமாக வெளியிட்டுள்ளனர். அதற்கான முக்கிய காரணமும் உண்டு. இவ்வாறான கல்விமான்களின் கருதுக்கள் சுதந்திரமான விசாரணைக்கு உதவி புரியும். துடித்தெழும் சிவில் சமூகத்தை அடக்கக் கூடிய தடைகளை களையக்கூடிய விடயமாக இது இருக்கும்.

சிவில் சமூகங்களின் அண்மைய நடவடிக்கைகள் சிலவற்றினால் அரசாங்கம் சிறிது நெருக்கடி நிலையை உணர்ந்துள்ளது. தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தின் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் அங்கங்களாக அவர்கள் சிவில் சமூகங்களை கருதுகின்றனர். இதன் மூலம் அவர்கள் பொதுமக்களின் தேவைகளை நிராகரிக்கின்றார்கள் அல்லது உணர்ந்து கொள்ள மறுக்கின்றார்கள். மக்களின் விருப்பங்களை வெளிப்படுத்தும் கருவியாக ஊடகங்கள் உள்ளன. அரசாங்கத்தின் ஆதரவை பெறாமையே சிவில் சமூகங்களின் தோல்வியாக உள்ளது. அத்துடன் மக்கள் கலந்து கொள்ளும் அரசியல் கொள்கைகள் குறித்து சிவில் சமூகம் அக்கறை கொள்ளத் தேவையில்லை. சமூகத்திலே உண்மையான, பயனான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின், சிவில் சமூகத்தை அச்சுறுத்தலாக கொள்ளும் அரசாங்கத்தின் ஆதரவை பெற்று, பக்கச்சார்பற்ற நிலையில் சமூகத்தின் சேவையாற்ற வேண்டிய பணி சிவில் சமூகத்திடம் உள்ளது. இதற்கு சிவில் சமூகம் மற்றும் ஊடகம் இணைந்த செயற்பாடு அவசியமாகும்.

சுதந்திரமும், பொதுமக்களும் பாதுகாப்பு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமென்பதை சிவில் சமூகமும், ஊடகமும் அரசாங்கத்துக்கு எடுத்து விளக்க வேண்டும். தற்போதைய சந்தர்ப்பத்தில் சம்பவங்களை அறிக்கைப்படுத்துவதிலும் பார்க்க, சம்பவம் ஏற்படுவதற்கான காரணிகளாக இந்த அங்கங்கள் மாறி வருகின்றன. அச்சு ஊடகங்கள் தற்போது புதிய மூலோபாயத்துடன் செயற்பட்டு வருகின்றன. ராவய பத்திரிகை ஆசிரியர், ஆளுங் கட்சிக்கு எதிரான விமர்சனங்களை உடைத்து தமது பத்திகளை எழுதி வருகின்றார். டெய்லி மிரர் பத்திரிகையும் தனது ஆசிரியத் தலையங்கத்தில் ஐ.நா செயலாளர் நாயகத்தின் முயற்சிகள் தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தது. ஐ.நா செயலாளரின் நடவடிக்கைகள் சரியா அல்லது தவறா என்பதனை, அந்த நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் உலக நாடுகள் தீர்மானிக்கும். கொரியரான அவரின் பெயரை வைத்துக் கொண்டு தமது கருத்துக்களை வெளியிடுவது சிறந்ததாக இருக்க முடியாது.

சிவில் சமூகம் மற்றும் ஊடகங்கள் ஆகிய இரண்டுமே நெருக்கடி நிலையை சந்தித்துள்ளன. அரசியல் சூழ்நிலைகளில் மாத்திரமல்லாது சமூக பாதுகாப்பு போன்ற விடயங்களில் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டிய முக்கியமான கடமை சிவில் சமூகத்திடம் உள்ளது. ஊடகமானது தாம் அச்சிடும் அல்லது ஒளிபரப்பும் செய்தியை அச்சிடுவதற்கு அல்லது ஒளிபரப்புவதற்கு முன்னர் உறுதிசெய்தி கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. வேறு சில காரணங்களால் இது சாத்தியமற்றதாக இருக்கலாம். அவ்வாறாயின், நாங்கள் நடுநிலைமயான ஊடகங்கள் என்ற வாசகங்களை பயன்படுத்துவதனை அந்த ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தற்போதைய இலங்கையின் ஊடக அறிவு தொடர்பில் கூறுவதற்கு, "மரத்துக்கு மரம் தாவிக் கொண்டிருக்கும் குரங்குகளுக்கு ஏணி வழங்குவது போல" என்ற சிங்கள பழமொழி ஒன்றை பயன்படுத்தலாம். ஆர்தர் கோஸ்ட்லர்ஸ் "வருகை மற்றும் வெளியேற்றம்" என்ற தனது நூலில் அதிகாரம் ஆள்பவர்களால் மாத்திரமல்ல பாதிக்கப்படுபவர்களாலும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றது என்ற வாசகத்தை மீள நினைவுபடுத்திக் கொள்கின்றேன். அவ்வாறானதொரு நிலைமையே எம்.ரி.வி தலைமையகத்தின் மீது கல்லெறிந்தவர்கள் குறித்த காட்சியில் வெளிப்படுகின்றது.

## பொருளாதார சூழ்நிலை

மார்ச் மாதத்தில் பொருளாதார சூழ்நிலையில் குறிப்பிட்டக் கூடிய மாற்றங்கள் எதுவும் இல்லை. அரசியல்வாதிகள் அனைவரும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் மும்முரமாக இருக்கின்ற நிலையில், வாக்காளர்களும் பொதுவில் தமது இறையாண்மை காத்துக் கொள்வதற்கான சட்ட ஆக்குநர்களை உருவாக்குவது குறித்த அக்கறை குறைந்தவர்களாகவே இருக்கின்றனர். பொருளாதார தீர்மானங்கள் குறித்த செயற்குழு நடவடிக்கைகள் தேர்தல் நிறைவடையும் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேர்தலின் பின்னர் 2010க்கான வரவுசெலவுத்திட்டத்தை சமர்பிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் 2.6பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியின் மூன்றாவது தவணைப் பணம் கிடைக்காமை தொடர்பிலும் தேர்தலின் பின்னர் கவனஞ் செலுத்தவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஆகஸ்ட் முதல் அமுல்படுத்தப்படவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி+ வரிச்சலுகை தடை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று இம்மாதம் பிரசல்ஸ் நகருக்குச் சென்றிருந்தது.எனினும், எவ்விதமான உறுதியான பதில்களும் இன்றி அந்த குழு நாடு திரும்பியது. இதேவேளை, தேர்தலின் பின்னர் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கவனிக்கவுள்ளது. மார்ச் மாதத்தில் மீளப்பெற்றுக் கொள்ளல் நட்டஈடு உத்தரவாதம் மற்றும் பயங்கரவாத கொள்கை உத்தரவாதம் என்பன நிறுத்தப்பட்டன. எனினும், ஐக்கிய இராச்சியத்தின் லொய்ட்ஸ் ரெஜிஸ்ட்ரியின் கணிப்பீடுகள் பொதுத் தேர்தல்கள் நிறைவு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.கொழும்பின் அனைத்து பங்குகளின் சுட்டெண் முதலீட்டாளர்கள் மற்றும் நாட்டின் தேர்தல் முடிவுகளை பிரதிபலிக்கக் கூடியனவாக அமைந்திருந்தது. மாத ஆரம்பத்தில் அனைத்து பங்குகளின் விலைச் சுட்டெண் 3,800க்கும் சற்று அதிகமாக இருந்தது. மாதம் முழுவதும் சிறிது வீழ்ச்சியை சந்தித்த விலைச் சுட்டெண், மாத இறுதியில் 2.5% சரிவை கண்டிருந்தது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் நிதி சம்பந்தமான தேவைகளுக்கான நிதிக்காக தேர்தல் நிறைவடையும் வரை காத்திருக்க முடியாது. 2009 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் எதிர்பார்த்ததை விட நட்டமாக அமைந்திருந்தது. 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட துண்டு விழும் தொகை மொத்த உள்நாட்டு

உற்பத்தியின் 10.2% ஆக உள்ளதாக திறைசேரி அறிவித்துள்ளது. இந்த பெறுமதி 7.0% ஆக உத்தேசிக்கப்பட்டிருந்தது. உத்தேசிக்கப்பட்டதற்கு குறைவாகவே வருமான வரியும், செலவும் அமைந்திருந்தது. இந்த வருமான இழப்பானது ஏற்றுமதி வருமானத்தில் ரூ 100பில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக, இறக்குமதியில் 400பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

செலவுகள் பகுதியில் சங்கிலிக் கோர்வை போன்ற பதிவுகள் ஏற்பட்டுள்ளன. மறுபடி நிகழும் செலவுகள், மிகவும் முக்கியமாக பொதுமக்கள் கடன்கள் மீதான வட்டி மற்றும் சம்பளம், ஆகியன உத்தேசிக்கப்பட்டதற்கும் 7.4% அதிகம். மூலதன செலவுகள் 15.1% க்கும் குறைவு. மூலதனத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 900மெகாவோட் நுரைச்சோலை நிலக்கரிச் சுரங்க மின்உற்பத்தி நிலைய திட்டமானது அதிக வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்துக்கு அரசாங்கத்துக்கு புகழ் சேர்க்கும் திட்டமாகும். அத்துடன் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும். இரண்டாம் கட்டமான 300 மெகாவோட் உற்பத்தி இந்த மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எவ்வாறாயினும், மிஹின் எயர் போன்ற குறைந்த வருமான உற்பத்தியுடைய சேவைகளுக்கு, வரவுசெலவுத்திட்டத்தில் முதலீடு செய்வது ராஜபக்ஸ நிர்வாகத்தின் பொருளாதார சுதந்திரம் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது. நிதி உதவியை நாடியுள்ள அரசாங்கத்துக்கு 100மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் இம்மாத ஆரம்பத்தில் வழங்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தக வங்கிகள் இரண்டு வருட முறியில் ஒரு டொலர் வட்டிவீதத்தில் ஆறுமாதத்திற்கான LIBOR +380 அடிப்படை புள்ளிகளுடன் 45மில்லியன் அமெரிக்க டொலர்களையும், மூன்று வருட முறியில் ஆறுமாதத்திற்கான LIBOR +395 அடிப்படை புள்ளிகளுடன் 55மில்லியன் அமெரிக்க டொலர்களையும் பெற்றுள்ளன. எண்ணெய் விலை வீழ்ச்சியின் மூலம் கடந்த 12 தொடக்கம் 15 மாதங்களில் நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி உதவி புரிந்துள்ளது. பெப்ரவரியில் 6.9% ஆக காணப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மார்ச் மாதத்தில் சரிவடைந்து 6.3% ஆக காணப்பட்டது. “கொள்கை பெறுமதிகளில்” மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாது என வங்கி மார்ச் மாதத்தில் அறிவித்தது. எவ்வாறாயினும், மூன்று மாத திறைசேரி சிட்டை பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தியில் சந்தை பெறுமதிகள் கடந்த நவம்பர் முதல் அதிகரித்து வருகின்றன. அரசாங்கத்திலிருந்து நிதியுதவி சார்ந்த நிபந்தனைகளே இதற்கு காரணமாகும். அரசாங்க கொள்வனவுகளால் தமது வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தனியார் துறையினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். அடுத்த வரவுசெலவுத் திட்டத்தை அரசாங்கத்தால் இலகுவாக சமர்ப்பிக்க முடியாது. இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களில் ஏற்பட்டுள்ள நிதிபுரள்வுகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை நிபந்தனைகளாக நிதி உதவி வழங்குபவர்கள் தெரிவித்து வருகின்றனர். மறுபுறத்தில், தேர்தலில் வெற்றி பெறும் நோக்குடன் அரசாங்கம் பல்வேறு நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி வருகின்றது. உதாரணமாக பொதுத்துறை ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு. 17,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவதாக அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளது. அத்துடன் விற்பனை வரியையும் ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

நிதி சம்பந்தமான வீழ்ச்சியை கட்டுப்படுத்துவது என்பதே அடுத்து வரப்போகின்ற நிதியமைச்சரின் முன் உள்ள பிரதான சவாலாக இருக்கப் போகின்றது. சில சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியே அடுத்த நிதியமைச்சராகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

## மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம்

பொதுத் தேர்தல் தொடர்பான பிரசாரங்களும், முன்னேற்பாடு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வரும் நிலையில், இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம் என்பது மீண்டும் பின்தள்ளப்பட்ட விடயமாக மாறியுள்ளது. இந்த காலப் பகுதியில் புதிதாக மீள்குடியேறியமை தொடர்பில் புதிய சம்பவம் ஒன்றும் பதிவாகவில்லை. இதேவேளை, நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இந்த பகுதி மக்கள் தொடர்பிலான தலையீடுகள் அத்தியாவசியமானதாகவும், அவசரமானதாகவும் உள்ளது. களுத்தறையில் ஐந்து பிள்ளைகளின் தாயினால் தனது பிள்ளை ஆற்றில் தூக்கி வீசப்பட்ட சம்பவம் செய்திகளில் பரபரப்பை உருவாக்கியிருந்தது. வறுமையில் உழன்று கொண்டிருக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பமே இது. மேல் மாகாணத்திலும், இவ்வாறான வறுமையில் வாடும் குடும்பங்கள் இருப்பது குறித்து கவனஞ் செலுத்த வேண்டிய நினைவூட்டலை இந்த சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. மனிதநேய சமூகம் என்ற

வகையில் எங்களிடம் இருக்கும் வளங்கள் மாத்திரம், நாங்கள் சேவை புரியும் சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு போதாது என்பதனையும் இந்த சம்பவம் எங்களுக்கு உணர்த்துகின்றது. இவற்றுக்கான உதவிகளின் போது உளவியல் ரீதியான ஆதரவும் மிகவும் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. பயனாளிகளுடனான நெருங்கிய உறவின் ஊடாக, உதவிகள் பயனாளிகளை சென்றடைகின்றதா என்பதனையும், அது அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கின்றதா என்பதனையும் அவதானிக்க வேண்டும்.

### தலையிடுவதற்கான இடம்?

சிலியில் இடம்பெற்ற புவியதிர்ச்சியைத் தொடர்ந்து இலங்கைக்கான நிதியின் அளவு மேலும் குறைக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான தற்போதைய நிலை முன்னேற்றத்திற்கான அடையாளங்கள் எதுவும் அற்றதாக இருக்கின்றது.

## சுற்றுச் சூழல்

ஜனவரி மாதம் முதல் நாடு முழுவதும் நீடித்த வரண்ட காலநிலையில், இம்மாதம் மாற்றம் ஏற்பட்டு பல பகுதிகளிலும் மழை வீழ்ச்சி பெறப்பட்டது. எவ்வாறாயினும், பல பகுதிகளில் தொடர்ந்து வரண்ட காலநிலை நீடிக்கின்றது. மலைப் பிரதேசங்களில் அதிக வெப்பநிலை காரணமாக காட்டுத்தீ ஏற்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. மழை வீழ்ச்சியின் காரணமாக, ஆங்காங்கு இடம் பெறும் மின்னல்மற்றும் இடியினாலும் உயிரிழப்புக்கள் பதிவாகி யுள்ளன. இதுவரை மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

மார்ச் 27ஆம் திகதி உலகெங்கிலும் உள்ள 4000 நகரங்களுடன் இணைந்து இலங்கையும் “புவி மணித்தியாலத்தை” அனுஷ்டித்தது. சக்தி நுகர்வை மதிக்கும் வகையில் ஒரு மணித்தியாலத்திற்கு தேவையற்ற மின் உபகரணங்கள் நிறுத்தப்பட்டு புவி மணித்தியாலம் அனுஷ்டிக்கப்பட்டது. நாடு முழுவதும் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அது குறித்த அவதானங்களை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில்



மாத்திரம் டெங்கு நோய் காரணமாக சுமார் 60 பேர் உயிரிழந்துள்ளனர். தேங்கும் நீரில் இருந்து பெருக்கும் நுளம்புகளின் காரணமாகவே டெங்கு நோய் ஏற்படுகின்றது. எனவே, சுற்றாடலை சுத்தமாக வைத்துக் கொள்ளல், நீர் தேங்காமல் பாதுகாத்தல் என்பவற்றின் ஊடாக டெங்கு நோயை தடுக்கலாம்.மார்ச் 22ஆம் திகதி “உலக நீர் தினம்”. அம்பத்தளையில் மற்றுமொரு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஆரம்பித்து, உலக நீர் தினத்தை இலங்கை நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை அனுஷ்டித்தது. இந்த செயற்றிட்டத்திற்கு டென்மார் அரசாங்கம் 5 பில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது. இந்த செயற்றிட்டம் 2015ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு நாட்டின் 85% மக்களுக்கு நீர் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் மழைநீரை சேமிக்கும் திட்டம் தொடர்பிலும் இலங்கை மழைநீர் சேமிப்பு அமைப்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. புதிய கட்டடங்களில் மழைநீரை சேமிப்பதற்கான வசதிகள் உள்ளடக்கப்படுவது தொடர்பில் அமுலில் உள்ள சட்டம் தொடர்பில் நகர அபிவிருத்தி அமைச்சர் டினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.வில்பத்து தேசிய சரணாலயம் ஊடான சர்ச்சைக்குரிய பழைய மன்னார் வீதியின் மீள்பாவனை மற்றும் புனரமைப்பு பணிகள் ஊடகத்தில் பிரதான கவனத்தைப் பிடித்துள்ளன. சரணாலயத்தை பாதுகாப்பதற்கு இந்த பாதை மூடப்பட வேண்டும் என பல்வேறு சுற்றாடல் ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# மாவட்ட பகுப்பாய்வுகள் (27/2/2010 TO 26/3/2010)

## அம்பாறை

அம்பாறையில் தேர்தல் துஃபிரயோகங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பொலிஸாரினால் இந்த விபத்துக்கள் குறித்து கவனஞ் செலுத்தப்படாமையால், மக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையிலான உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடரும் நிலையில், நிலப்பிரச்சினைகள் சமூகப் பிரச்சினைகளாக மாறிவருகின்றன.

இம்மாதம் முழுவதும் தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடைந்திருந்த நிலையில், தேர்தல் தொடர்பில் மக்கள் மத்தியில் விருப்பமின்மை வெளிப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அத்துடன், மாவட்டத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பிலும் மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாவட்டத்தின் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியமாகும்.

## மட்டக்களப்பு

மாவட்டத்தில் இராணுவ மற்றும் கடற்படை முகாம்கள் தேவைகளற்ற வகையில் வலுப்படுத்தப்படுவதாக ரி.என்.ஏ அரசாங்கம் மீது குற்றஞ்சாட்டியுள்ளது. எனினும், எஞ்சியுள்ள எல்.ரி.ரி.ஈயினர் மற்றும் வேறு குழுக்களின் அச்சுறுத்தல்களில் இருந்து மாவட்டத்தில் உள்ள மக்களை பாதுகாக்கும் நோக்கிலேயே இராணுவ மற்றும் கடற்படை முகாம்கள் அதிக கவனத்துடன் வலுப்படுத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் பதிலளித்துள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் செல்ல முயற்சித்த 25பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நாட்டில் இருந்து வெளியேற முயற்சிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். தமது எதிர்காலம் மற்றும் பாதுகாப்பு குறித்த சிக்கல்கள் நிலவுவதே இவ்வாறான சட்டவிரோத வெளியேற்றங்கள் அதிகரிக்க காரணமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்பு

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகின்றனர். பதிவு செய்யப்பட்ட அரசியற்கட்சிகளிலும், சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. ஜெனரல் சரத் பொன்சேக்காவும் பாராளுமன்ற தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்த ஜனநாயக தேசிய முன்னணி என்ற கட்சியின் கீழ் இவர் போட்டியிடுகின்றார். பிரதான போட்டியிடும் எதிர்க்கட்சிகளில் மக்கள் விடுதலை முன்னணியும், ஜனநாயக தேசிய முன்னணியும் இடம்பிடிக்கின்றன. எதிர்க்கட்சிகளில் ஏற்பட்டுள்ள இந்த பிளவானது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்புக்களை அதிகரித்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுமாயின், தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தை மாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளது. எவ்வாறாயினும், தேவையான அரசியல் அக்கறைகளை முன்னிறுத்தியாதாக அரசியல-மைப்பு மாற்றங்கள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையும் உள்ளது.

சிறுபான்மை குழுக்களின் தேர்தல் கூட்டங்கள் ஊடாக எதிர்வரும் தேர்தலுக்கான சிறுபான்மையினரின் குரல்கள் உரக்க ஒலிக்க ஆரம்பித்துள்ளன. எனினும், பெரும் எண்ணிக்கையிலானா தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் தமிழ் வாக்காளர்களின் வாக்குகள் தொடர்பில் அதிக கவனஞ் செலுத்தப்படுகின்றது. இவர்களுக்கான வாக்காளா அட்டைகள் கிடைப்பதனை தேர்தல் ஆணையாளர் நாயகம் உறுதி செய்ய வேண்டும்.

சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்கான உலக வங்கியின் 18மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் மற்றும், அட்டன்-நுவரெலியா வீதியை அபிவிருத்தி செய்வதற்கான கொரியா ஏற்றுமதி,இறக்குமதி வங்கியின் 40மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் என்பன அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் நாட்டின் பொருளாதாரத்தையும், உட்கட்டமைப்பையும் அபிவிருத்தி செய்வதற்கு துணைபுரிகின்றன.

## யாழ்ப்பாணம்

அரசாங்கத்துடன் இணைந்த அரசியற் கட்சிகள் உரத்த குரலில், தீவிரமாக பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்து வரும் நிலையில், எதிர்க்கட்சிகள் உட்பட ஏனைய கட்சிகள் மிகவும் அமைதியான முறையில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. இவர்களில் சில கட்சிகளின் வேட்பாளர்கள் தனிப்பட்ட ரீதியில் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களது ஆதரவாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர். தேர்தல் நடவடிக்கைகளின் இளைஞர்களின் பங்கு வெகுவாக குறைந்துள்ளதுடன், சிலர் மாத்திரமே தேர்தல் தொடர்பிலான தமது கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்துள்ளன. அத்துடன், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்டத்தின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம் என்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் உடனடியாக கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயமாக இருக்கின்றது.

## மன்னார்

பொதுமக்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களிடம் இருந்து கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் செயற்படும் பாதுகாப்பு படையினர், அடம்பன் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்களை கைப்பற்றியுள்ளனர். பேராயர்கள் குழுவொன்று மன்னார் மற்றும் வவுனியாவில் மீள்குடியேறியவர்கள் வசிக்கும் பகுதிகளுக்குச் சென்று, அவர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கியதுடன், அவர்களுடைய அவசரமான தேவைகள் குறித்தும் கேட்டறிந்தனர். பேராயர்களால் ரூ3.5மில்லியன் பெறுமதியான 500 சைக்கிள்கள், சூரிய மற்றும் எண்ணெய் அடுப்புக்கள், பாடசாலை மாணவர்களுக்கான உடைகள் மற்றும் உபகரணங்கள்

. மீளக்குடியமர்த்தப்பட்டவர்களில் 50% ஆனவர்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தகரங்களை மாத்திரம் வைத்துக் கொண்டே கொளுத்தும் வெயிலில் இருந்து தம்மை காத்துக் கொள்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். குடிநீருக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. காலையில் குறைந்த அளவிலான உணவை உட்கொள்ளும் மாணவர்கள் பாடசாலைகளுக்காக நான்கு கிலோமீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டியுள்ளது. இதேவேளை, போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விவசாய,மீன்பிடி உபகரணங்கள் என்பன உள்ளடங்கலாக யுத்தத்தின் போது தாம் இழந்த விடயங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இம்மக்கள் முன்வைக்கின்றனர். பெரும்பாலானோர் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். யுத்தால் சேதமடைந்த தமது வீடுகளை பார்வையிடுவதற்காக மீள்குடியேற்றப்பட்ட இடம்பெயர்ந்தவர்கள் பலர் தமது சொந்த கிராமங்களிற்கு செல்கின்றனர். இறப்புச் சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் இவர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் .

இதேவேளை, நாட்டில் நிலவும் உயர்வெப்பநிலை காரணமாக, வடக்கு மற்றும் கிழக்கில், விசேடமாக பாரிய குளம் வற்றி வருகின்றது. பயிர்செய்யக்கூடிய 23,000 ஏக்கர் நிலத்தில் 16,000 ஏக்கர் நிலத்தில் மாத்திரமே பயிர்செய்யப்பட்டுள்ளது. பயிர்செய்யப்பட்ட 16,000 ஏக்கர் நிலத்தில், போதிய நீர்ப்பாசனம் இன்மை காரணமாக 3,000 ஏக்கர் நிலத்தில் செய்யப்பட்ட பயிர்ச்செய்கை அழிந்துள்ளது.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில், அகதிகள் முகாமில் உள்ள பல இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், அதன்பொருட்டான ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள் பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். எனினும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் தமிழ்நாடுக்குச் செல்வதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் தீவையும், பிரதான நிலத்தையும் இணைக்கும் மன்னார் பாலம் மார்ச் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வினால் பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்த பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்காக JICA ரூ 2,460மில்லியன் நிதியுதவி வழங்கியள்ளது.

## திருகோணமலை

திருகோணமலையில் போட்டியில் தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதற்கே, தமிழ் சமூகத்தினர் மத்தியில் அதிகமான ஆர்வம் காணப்படுகின்றது. தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் ரி.என்.ஏ தீவிரமாக பிரசார நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. எவ்வாறாயினும், மேலும் சில தமிழ் கட்சிகளும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றன. இதனால் தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், மிகவும் நெருக்கமான தேர்தல் முடிவுகளே இம்மாவட்டத்தில் பெறப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது மாவட்டத்திற்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தலாம். திருகோணமலைக்கான தமிழ் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களால் மாத்திரமே தமது தேவைகள் நிறைவுசெய்யப்படலாம் என மாவட்ட தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

எதிர்வரும் தேர்தல் காரணமாக மாவட்டத்திற்கு விஜயம் சுற்றுலாப் பயணிகளின் வருகை திடீரென்று குறைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதன்காரணமாக மாவட்டத்தில் உள்ள சுற்றுலா விடுதிகள், உணவகங்கள் மற்றும் அதுசார்ந்த தொழிற்துறைகள் அனைத்தும் பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளன. இதேவேளை, ஏ9 வீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து வர்த்தகம் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இதனால் அதிகளவான வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. 30வருடங்களின் பின்னர் வரலாற்று சிறப்புமிக்க திருக்கோணேஸ்வர ஆலய கர்ப்பகக் கிரகக் கடவுள் திருகோணமலை நகருக்குள் கொண்டு வரப்பட்டு மக்களுக்கு தரிசனம் வழங்கப்பட்டது. ஆலய வருடாந்த மகோற்சவம் மார்ச் மாதம் 29ஆம் திகதி இடம்பெற்றது.

## வவுனியா

பல்வேறு அரசியற் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகி வரும் நிலையில் வவுனியாவில் ஜனநாயகத்தின் பண்புகள் அதிகரித்து காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது வவுனியாவில் வேட்பாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவாகத்தான் உள்ளது. அதேவேளை, தேர்தல் சட்டங்களை அத்துமீறும் நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் வன்முறைகளும் வவுனியாவில் குறைந்த அளவிலேயே பதிவாகியுள்ளன. தேர்தல் மீதான மக்களின் ஆர்வமும் குறைவாகவே உள்ளது. வெளிப்படைத்தன்மையுள்ள பாரிய பிளாஸ்டிக் பெட்டிகளே இம்முறை தேர்தலில் பயன்படுத்தப்பட போகின்றன. வாக்குப் பெட்டிகள் எவ்வளவு நிறைந்துள்ளன என்பதை மக்கள் அறிந்து கொள்வதற்காகவும், வாக்களிக்கும் முறையில் காணப்படும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியாவுக்கான அரசாங்க அதிபரினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வாக்களிக்கும் நிலையங்களுக்கான இலவச பேருந்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எனினும், இந்த சேவையை பயன்படுத்த விரும்புபவர்கள் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் மார்ச் மாத இறுதிக்குள் தங்களுடைய விபரங்களை பதிவு செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளனர்.



*Source:Colombo Asia News*

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் மனு மீதான விசாரணையின் போது, வவுனியா மற்றும் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த அனைத்து தடுப்பு முகாம்களும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்கு கீழ் இருந்ததாகவும், இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவில்லை எனவும் தீர்ப்பளித்தது. முகாம்களில் இருந்த சுமார் 26,000 மாணவர்கள் இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களுக்காக அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு சமூகமளிக்கின்றனர். எனினும், போதிய வளங்கள் இன்மையினால் அவர்களுடைய கற்பித்தல் நடவடிக்கைகளை முழுமையாக முன்னெடுப்பதற்கு முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் கடமையாற்றுவதற்கு மேலும் சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக மற்றும் நிரந்தர தங்குமிடங்களை அமைத்துக் கொடுத்தல் மற்றும் வாழ்வாதார, நிகழ்ச்சிகளில் உதவி புரிதல் போன்ற வகையில் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றன. மேலதிகமாக, மானிக் பார்மில் இந்திய உயர்ஸ்தானிகரால் அவயவங்கள் பொருத்தும் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையத்தில் இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் யுத்தத்தால் அவயவங்களை இழந்தவர்களுக்கு அவயவங்கள் பொருத்தப்படுகின்றன.

எங்களது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்

http://www.humanitarian-srilanka.org/Knowledge_Centre/ Publications.php

**சூழ்நிலையின் துரித மதிப்பிடல்** (RCA) உள்ளூர் சூழ்நிலைகளின் மாற்றங்களை நன்கு புரிந்து கொள்வதன் அடிப்படையில் பல்வேறுபட்ட மனிதநேய மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்து கவனம் செலுத்தும் அதிக பயனுறுதி கொண்ட இடையீடுகளைத் திட்டமிட்டு, அமுல்படுத்துவதற்கான பயனுள்ள தகவல்களை மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதே வேளை, சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் இடையீடுகள் மாவட்டங்களின் சமாதானம் மற்றும் மோதல்நிலை மாற்றங்களுக்கு கூருணர்வுத்தன்மை கொண்டவை என்பதையும் முகவர்கள் மோதல்களை சிறிதளவேனும் உருவாக்கவோ அல்லது மோசமாக்குவதையோ தவிர்த்து மோதல் தணிப்பு/மோதல் உருமாற்றம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கூடுதல் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

சூழ்நிலைகளின் அபாயவாய்ப்புக்களை மதிப்பிடல் முகவர்களின் செயற்பாடுகளை சற்று இடைநிறுத்தி ஊழியர்கள் மற்றும் திட்டம் அமுல்படுத்தும் இடங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

வெளியேயுள்ள மட்டத்தில் (பொது மக்கள், சர்வதேச சமுகம்) ஆலோசனைத் தேவைகளுக்காக இலங்கையின் மாவட்டங்களின் நிலைமைகள் பற்றிய விரிவானதும், நடுநிலையானதுமான தகவல்களை சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் வழங்கும்.

இந்த அறிக்கை மீதான உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறோம், அவற்றை பின்வரும் மின்னஞ்சல்/தபால் முகவரிக்கு தயவு-செய்து அனுப்பி வைக்கவும்: feedback@cha.lk

மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு
86, றொஸ்மீட் பிளேஸ்,
கொழும்பு 7, இலங்கை.
தொலைபேசி/தொலைநகல் : ……………………..